**செய்தி வெளியீடு எண்:570** **நாள் : 11.11.2014**

## <u>மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்</u>
## <u>திரு. தோப்பு என்.டி.வெங்கடாச்சலம்அவர்களின் ஆய்வு கூட்டம்</u>

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுகின்ற தமிழக அரசின் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் **திரு. தோப்பு என்.டி.வெங்கடாச்சலம்** அவர்கள் 10.11.2014ல் சென்னையில் துரித ஒலி மாசு கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு இணையதளத்தின் மூலமாக சென்னையில் பத்து இடங்களில் ஒலி மாசு அளவுகளை பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்காக சென்னை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்னணு அறிவிப்பு பலகையை திறந்து வைத்தார். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் திரு.கே.ஸ்கந்தன், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., மற்றும் உறுப்பினர் செயலர் முனைவர் கே. கார்த்திகேயன் ஆகியோர் உடன் இருந்தனர். அதனை தொடர்ந்து மாசு கட்டுப்பாடு வாரிய மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவுரைகளையும் வழங்கினார்கள்.

மக்களின் நலன் கருதி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால்** அறிவிக்கப்பட்ட சுற்றுச்சூழல் துறை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்பான அறிவிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை குறித்த ஆய்வின்போது, அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளையும் முழுமையாக நிறைவேற்றிட வாரிய அதிகாரிகள் முனைப்புடன் செயலாற்றிட வேண்டும் எனவும்,

மாசு தடுப்பு சாதனங்களை சரியான முறையில் இயக்காத தொழிற்சாலைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்,

பல்வேறு நீதி மன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் மீது தனி கவனம் செலுத்தி அதனை முடிப்பதற்கான பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்றும்,

பொதுமக்கள், விவசாய சங்கங்கள், இன்னும் பிற அமைப்புகளிடமிருந்து பெறப்படும் சுற்றுச்சூழல் குறித்த புகார்கள் மீது கவனம் செலுத்தி உடனடியாக ஆய்வினை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்,

மாண்புமிகு **புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் எண்ணத்திற்கேற்பவும், வழிகாட்டுதல்படியும் தமிழகத்தை சுற்றுச்சூழலில் மாசில்லா மாநிலமாக திகழ்வதற்கான அனைத்து பணிகளையும் செவ்வனே மேற்கொள்ளவேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் **திரு. தோப்பு என்.டி.வெங்கடாச்சலம்** அவர்கள் கலந்து கொண்ட இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுச்சூழல் (ம) வனத்துறை செயலர் திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் திரு. கே. ஸ்கந்தன், இ.ஆ.ப., வாரிய உறுப்பினர் செயலர் முனைவர் கே. கார்த்திகேயன், கூடுதல் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள், மண்டல இணைத்தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் வாரிய உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**